# விறகு மற்றும் தீவனம்

## (இனம் . 12)

01. எரிபொருள், தீவனம் மற்றும் வெட்டு மரம் ஆகியவற்றுக்கான காடு வளர்ப்புத் திட்டம் முக்கியமாக ஊரகத் தொழில் செறிந்ததாகும். இப்பணிகளுக்கானச் செலவில் கூலியாகக் கிட்டத்தட்ட 80 விழுக்காடு செல்கிறது. எரிபொருளுக்கான மரத் தோட்டத் திட்டம், எரிபொருள் பற்றாக்குறையான மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. எரிபொருளுக்குரிய மரத் தேவையைப் நிறைவு செய்வதற்கு வனத்துறையானது, சமூகக் காடுவளர்ப்பு, இடைபடு காடுவளர்ப்பு, மற்றும் விரிவான காடுவளர்ப்பு போன்ற திட்டங்களைச் செயல்படுத்துகின்றது. இடைபடு காடு வளர்ப்பு திட்டமானது வனப்பகுதியையும், பொதுத் தரிசு நிலங்களையும் பயன்படுத்தித் தீவனப் பெருக்கம் (புற எல்லையில்) விறகு மரம் (நடுப்பகுதியில்) மற்றும் வெட்டு மரம் ( உள்பகுதி) ஆகியவற்றை அதிகரிக்க கருதியுள்ளது. இந்தத் திட்டத்தில் வனத்தைச் சூழ்ந்த பகுதியில் வசிக்கும் உள்ளூர் மக்களை ஈடுபடுத்துவதால் அது அவர்களுக்கு கூடுதலான வேலைவாய்ப்பையும் வருவாயையும் உருவாக்குகிறது. மரங்கள் நடத் தொடங்கும் காலத்தில் வேலைவாய்ப்பையும் அறுவடை காலத்தில் உற்பத்தி பொருள்களை அளிப்பதன் வாயிலாக இத்திட்டத்தின் பலன் உள்ளூர் மக்களுக்கு நேரிடையாகச் சென்றடைகிறது. வேளாண்மைத் துறையும், ஊரக வளர்ச்சித் துறையும் வேளாண்காடு வளர்ப்புத் திட்டத்தைச் சமுதாய / ஊராட்சி / ஊராட்சிஒன்றியத்திற்குரிய தரிசு நிலங்களிலும், குளங்களிலும் முறையே செயல்படுத்தி வருகின்றன.

02. தீவனப் பெருக்கமும் உற்பத்திப் பண்ணைகளும் கால்நடைப் பராமரிப்புத் துறை திட்டங்களின் இன்றியமையா கூறாக உள்ளன. வேளாண் மற்றும் வனத் துறைகளும் கூட தீவன மேம்பாட்டுத் திட்டங்களை மேற்கொள்கின்றன. தீவனம் மிக இன்றியமையாததாக உள்ளது. தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகமும், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகமும் தீவன ஆராய்ச்சியை மேற்கொள்கின்றன. வனக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனமும், தீவன ஆராய்ச்சியை ஒரு குறிப்பிட்ட அளவில் எடுத்துக் கொள்கிறது.

03. கால்நடை பாராமரிப்புத் துறையானது மாநிலம் முழுவதிலும் தீவன மேம்பாட்டு நடவடிக்கைகளான தீவனப் பெருக்கம், பெருகி வரும் தேவையை வழங்கி நிறைவு செய்தல் ஆகியவற்றில் சிறப்புக்கவனம் செலுத்துகின்றது. நிலப்பரப்பும், பாசன வசதியும் ஒரளவே இருப்பதால் தமிழ்நாட்டின் விவசாயிகள் தீவனப் பயிர்கள் வளர்ப்பதைக் காட்டிலும் வணிக மற்றும் உணவுப் பயிர்களை வளர்ப்பதிலேயே தீவிரமாக உள்ளனர். இருப்பினும், அரசே தொடங்கி நடத்தும் தீவன மேம்பாட்டு நடவடிக்கையைக் கால்நடைக்குரிய சொந்தக்காரர்கள் தங்களின் தேவையை நிறைவு செய்து கொள்ள தீவனப் பயிரிடுதலை மேற்கொள்ள வேண்டும். இத்துறையானது தீவனக்கன்றுகள், தீவன மர நாற்றுகள், தீவன விதைகள் முதலியனவற்றைப் பல்வேறு திட்டங்களின் மூலம் வழங்கி வருகின்றது.

04. தீவன உற்பத்தியைப் பெருக்குவதன் பொருட்டு உலக வங்கி நிதியுதவி பெற்ற கால்நடை மேம்பாட்டுத் திட்டம், ஐரோப்பிய பொருளாதாரத் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்களின் மூலமாக நல்லதரமான தீவன விதைகள், நாற்றுகள் மற்றும் தீவனத் தழைகளை விவசாயிகளுக்கு வழங்குகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள மாவட்டத் தீவன வளர்ச்சிக் குழுவின் பணியாளர்கள் தீவன உற்பத்தியைப் பெருக்குவதற்கு உதவியையும் விவசாயிகளுக்கு அளிக்கிறார்கள். இவ்வாறு மாநிலத்தில் இன்றியமையாப் பிற பயிர்களின் உற்பத்திக்கு பாதகமின்றி, உற்பத்தியும் வளர்ச்சியும் பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்களால் பெருக்கப்படுகிறது. பால்பண்ணை மேம்பாட்டு நடவடிக்கைகள் இத்துடன் இணைந்துள்ளமையால் தீவனத்திற்கான தேவை அதிகரித்துக் கொண்டே இருக்கின்றது. பொதுவாக. மாநிலத்தில் தீவனப் பற்றாக்குறை எதுவும் இல்லை. கடுமையான வறட்சி நிலைகளின் போது சில பகுதிகளின் தீவனப் பற்றாக்குறையை மாவட்டத்திற்கிடையேயான தீவன வரத்து மூலம் நிறைவு செய்யலாம். இருப்பினும், மதீப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை தமிழ்நாட்டில் 1994 இல் கால்நடைத் தீவன மேலாண்மை பற்றி பல நிலையில் அங்கொன்றும் இங்கொன்றுமான மாதிரி முறையை மேற்கொண்டு மதிப்பீட்டு ஆராய்வை மேற்கொண்டது. அந்த மதீப்பீடு அறிக்கையின் படி தமிழ்நாட்டில் கால்நடைத் தீவன தேவைக்கும், பயனீட்டு அளவுக்குமிடையே பரவலாக இடைவெளியுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்விடைவெளியானது உலர்ந்த தீவனத்தில் 63 விழுக்காடும் பச்சை தீவனத்தில் 93 விழுக்காடும் மற்றும் செறிவூட்டப்பட்ட தீவனத்தில் 78 விழுக்காடும்

உள்ளது. மக்கள்தொகை பெருகிக் கொண்டேயிருப்பதால் எரிபொருளின் தேவையும் அதிகரிக்கின்றது. காப்புக் காடுகளிருந்து எரிபொருள் சேகரித்தலைத் தடைசெய்தல் போன்ற வனத்துறையின் ஒழுங்குமுறை மாற்றங்களில் எரிபொருள், விறகுமர வழங்கு நிலை மேலும் மோசமாகி உள்ளது. எனவே, ஊராட்சியும், ஊராட்சி ஒன்றியமும் அங்குள்ள சமுதாயத்தினரை ஈடுபடுத்துதல் மற்றும் பொதுச் சொத்து வளங்களைப் பயன் படுத்துவதன் மூலம் தீவனம் மற்றும் எரிபொருள் வழங்கலை அதிகரிப்பதில் தீர்வுக்குரிய பங்கு வகிக்க வேண்டும். கால்நடை பராமரிப்புத் துறையும் வனத்துறையும் எரிபொருள், விறகு தோட்டங்களை அதிகரிக்கத் தீவன விதைகள் நாற்றுகள், தீவனத்தாள்கள் ஆகியவற்றை வழங்க வேண்டும். வனத்துறைப் பகுதியின் கீழ் விறகு மற்றும் தீவனம் பின்வரும் திட்டங்களின் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்றன தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் விறகு மற்றும் தீவனத் தோட்டங்களை அதிகரித்தல், ஊரக மரத் தோட்டமும் காடு வளர்ப்பும் ஆகும். மாநிலத்தில் கால்நடை பராமரிப்புத் துறையின் கீழ் 11 கால்நடைப் பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன.

05. பொதுவாகச் ஊராட்சிக்குச் சொந்தமாகப் புறம்போக்கு புல் வெளிகள் இருப்பதால் சமூக தரிசு நிலங்களில் சமூக பண்ணைத் தோட்டங்களை அமைப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. ஊராட்சிக்குரிய நிலங்களில் கிராமத்திற்குத் தேவையான எரிபொருள், தீவனம் மற்றும் வெட்டு மரங்களை உற்பத்தி செய்வதோடு உள்ளூரில் வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கும். வருவாயைப் பெருகுவதற்கும் வழி கோலுகிறது. ஊராட்சிகள் கிராமமக்களை அவர்களது சொந்த நிலத்தில் நல்ல தரமான எரிபொருள் தோட்டங்களை வணிகரீதியில் மேம்படுத்த ஊக்கப்படுத்தி உதவி செய்ய வேண்டும். சமுதாய மற்றும் ஊராட்சி மேய்ச்சல் நிலங்களில் கால்நடைகள் மேய்வதற்கு உரிய கட்டணத்தை ஊராட்சி பெறவேண்டும். ஊராட்சி ஒன்றியம் நேரடியாகவோ அல்லது ஊராட்சி மூலமாகவோ எரிபொருள் மற்றும் தீவன மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்த முடியும். கால்நடை பராமரிப்பு, வேளாண்மை, வனம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறைகளின் மூலமாக செயல்படுத்தும் திட்டங்களின் ஆய்வுவையும் மேற்கொள்ள முடியும். திட்டங்களை வகுப்பது, வேளாண்மை நிலைக்குழு மூலமாக எரிபொருள் மற்றும் தீவன மேம்பாட்டுத் திட்டங்களை ஆய்வு செய்வது மாவட்ட ஊராட்சியின் பங்கு ஆகும். மேற்கண்ட பின்னணியில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பின்வரும் அதிகார ஒப்படைப்புக்குப் பரிந்துரைக்கப்படுகிறது.

## I. ஊராட்சி

| நடவடிக்கை<br>(1) | அதிகார ஒப்படைப்பு<br>(2) |
|---|---|
| 1. தீவன உற்பத்தியும் விறகு மரத்தொகுதிகளை அதிகரித்தலும் | 1. கிராமத்திற்குத் தேவையான எரிபொருளையும், தீவனத்தையும் மதிப்பிடுதல். |
| | 2. விறகு மரத்தொகுதிகளையும் தீவனத் தோட்டங்களையும் ஏற்படுத்துவதற்காக கிராமத்தரிசு நிலங்கள் மற்றும் தரமற்ற நிலங்களை அடையாளம் காணல். |
| | 3. எரிபொருள்/தீவனத் தோட்டங்களுக்காக, வகை மாதிரிகளை, இடங்களைத் தெரிவு செய்தல். |
| | 4. தீவனம் மற்றும் எரிபொருளுக்காக நாற்றங்கால்கள், விதை பண்ணை வழங்கலை ஊக்குவித்தல். |
| | 5. சமுதாயம்/ஊராட்சி/பாதுகாக்கப் படாத காடுகள்/இடைபடு காடுகள் ஆகியவற்றில் விறகு மரத்தோட்டங்களை, தீவனப் பயிரிடும் இடங்களைப் பேணிப் பாதுகாத்தல். |

6. சமுதாய இடங்களிலிருந்து உற்பத்தி யாகும் எரிபொருள் மற்றும் தீவன விளைபொருள் வழங்கலை மேற் பார்வையிடுவதற்கும், இயக்குவதற்கும் தீர்மானித்தல்.

7. புகைவரா அடுப்பு, சூரிய அடுப்பு, தரமான தீவன பயிர்கள் போன்ற எரிபொருள் திறனுடைய கருவிகளைப் பயன்படுத்துவதற்குரிய விழிப்புணர்ச்சியை வளர்த்தல்.

8. சமுதாயக் காடுகளில் மேய்ச்சலுக்கு அனுமதிக்கப்பட்ட மிருகங்களுக்குக் கட்டணம் வசூலித்தல்.

9. தீவன விதைகள்/தழைகளை உள்ளூர் மக்களுக்காக வளர்த்தலும் வழங்குதலும்.

## II. ஊராட்சி ஒன்றியக் குழு

| நடவடிக்கை (1) | அதிகார ஒப்படைப்பு (2) |
|---|---|
| 1. எரிபொருள், தீவன உற்பத்தி | 1. எரிபொருள் / தீவனத்தோட்டங்கள் அமைப்பதற்காக தரிசு நிலங்களை தரமற்ற நிலங்களை அடையாளம் காணல். |
| | 2. தீவன நாற்றங்கால்களுக்கான இடங் களை அடையாளம் காணல். |
| | 3. நாற்றங்கால் அமைப்பு திட்டத்தை ஒருங்கிணைத்தல். |
| | 4. எரிபொருள் திறனுடைய மர அடுப்புகள், புகைவரா மற்றும் சூரிய அடுப்புகளை வழங்கல். |
| | 5. எரிபொருள் திறனுடைய கருவி களையும் நல்லதரமான தீவன மாதிரிகளையும் பயன்படுத்துவதற்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல். |
| | 6. ஊரக விறகு மரத்தோட்டங்களையும் காடு வளர்ப்பு திட்டங்களையும் செயற்படுத்துதல், விறகு மரங்களை வளர்த்தல் மற்றும் தீவனத் தோட்டங்களை வளர்த்தல். |
| | 7. வேளாண்மை, கால்நடை பராமரிப்பு, வனம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறைகளால் செயல்படுத்தப்படும் எரிபொருள் மற்றும் தீவனத் திட்டங் களை ஆய்வு செய்தல். |

## III. மாவட்ட ஊராட்சி

| நடவடிக்கை (1) | அதிகார ஒப்படைப்பு (2) |
|---|---|
| 1. எரிபொருள், தீவன உற்பத்தி | 1. எரிபொருள், தீவன மேம்பாட்டுத்திட்டங்களை, மாவட்ட அளவில் மேற்கொண்டு இப்பொருள் தொடர்பில் மாநில அரசுக்கும் ஊராட்சிக்கும் ஆலோசனை வழங்குதல். |
| | 2. எரிபொருள், தீவனத்திட்டங்கள், மீதான பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தும் உள்ளாட்சி அமைப்பு களையும், வேளாண்மை, ஊரக வளர்ச்சி, வனம் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறைகளைக் கண் காணித்து மேற்பார்வையிடல். |
| | 3. மாவட்டத்தில் தீவனப்பற்றாக்குறையுள்ள இடங்களுக்கு மிகையாக உள்ள இடங்களிலிருந்து எரிபொருளையும் தீவனத்தையும் வழங்க ஏற்பாடு செய்தல். |

### நிருவாக மற்றும் சட்டச் சிக்கல்

06. கால்நடை பராமரிப்புத் துறையின் மேம்பாட்டு நடவடிக்கைகள் மாநிலத்திலுள்ள அனைத்துக் கால்நடை நிறுவனங்களில் பணியாற்றும் பணியாளர்களால் மேற்கொள்ளப்படுகிறது. கால்நடை பண்ணைகளும் பல்வேறு திட்டங்களின் செயலாக்கமும் கால்நடை பராமரிப்புத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன. அதே சமயத்தில், தங்கள் திட்டங்களின் நிருவாகக் கட்டுப்பாட்டினை வனத்துறை வைத்துக் கொண்டுள்ளது. இப்பொருள் தொடர்பில் சட்டச்சிக்கல் இல்லை.

### நிதிச்சிக்கல்

07. மலைகள் இல்லாத சுற்றுப்புறப் பகுதிகளின் ஊரக எரிபொருள் தோட்டங்கள் மற்றும் காடு வளர்ப்பு திட்டம் தொடர்பில், மாநில மற்றும் மைய அரசுக்கிடையே 1994–95இல் ரூ.216.44 இலட்சமும், 1995–96 இல் ரூ.284.03 இலட்சமும், 1996–97 ஆம் ஆண்டுக்கு ரூ.289.73 இலட்சமும் பங்கிடப்பட்டுள்ளன. கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் வனத்துறையின் கீழ் ஒப்பளிக்கப்பட்ட நிதியுதவியை மூன்று பிற திட்டங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. அதாவது (அ) தீவன மேம்பாடு (ஆ) ஊரக எரிபொருள் தோட்டத் திட்டம் (இ) இமயமலைப் பகுதிகள் அல்லாத இடங்களில் எரிபொருள் மற்றும் தீவனத் தோட்டங்களை வளர்த்தல். இந்நிதியை செயல்படுத்தும் திட்டங்களுடன் ஊராட்சி ஒன்றியத்திற்கு மாற்றப் பெற வேண்டும்.